**(சார்பு நீதிமன்றம்) செஞ்சி**

**ஓ.எஸ்.எண். 101/2022** **நாள்.20.02.2024**

2024 ம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 20 நாள் வாதி தரப்பு 1 ம் சாட்சியின் வாக்குமூலம் 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | குமார் | தொழில் | |
| த. பெ./க.பெ. | சின்னா | சாதி | |
| கிராமம் | அவியூர் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 60 |

**வ.சா.1**

**குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

**I.** நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை விவரங்கள் எனக்கு தெரியும். பிரதிவாதி வழக்குரையை நிராகரிக்க வேண்டும் என்று தாக்கல் செய்த மனுவிற்கு நான் செய்துள்ள ஆட்சேபனை விவரங்கள் எனக்கு தெரியும். அவியூரில் பூர்வீக சொத்து 4 ஏக்கர் இருந்தது. பூர்வீக சொத்தை விற்று தான் வழக்கு சொத்துக்களை வாங்கினோம். பூர்வீக சொத்துக்களை 1997 ம் ஆண்டு விற்றோம். அதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். மேற்படி ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என் சகோதிரி இறந்துவிட்டதால் அவரின் வாரிசுகளை இவ்வழக்கில் சேர்க்கவில்லை. தாவா 1 , 2 அயிட்ட சொத்துக்களின் விஸ்தீரணம் 1 ஏக்கர் 86 செண்ட் ஆகும். மேற்படி சொத்துக்கள் 1997 ம் ஆண்டு கிரையம் பெறப்பட்டதாகும். மேற்படி நிலத்தில் நான் 1997 யிலிருந்து தற்போது வரை பயிர் வைத்துள்ளேன். மேற்படி சொத்திற்கான அடங்கலில் என் பெயர் வரவில்லை . அந்த சொத்தை என் அண்ணன் பெயரில் கிரையம் பெற்றதால் என் அண்ணன் பெயர் அடங்கலில் உள்ளது. 2015 ம் ஆண்டில் இருந்து மேற்படி சொத்திற்கு என் அண்ணி பெயரில் அடங்கல் உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 2015 ம் ஆண்டியிலிருந்து என் அண்ணி பெயரில் மேற்படி சொத்து உள்ளது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. என் அண்ணன் உடல்நிலை சரியில்லாமல் இருக்கும் போது என் அண்ணன் மகன் மற்றும் 1ம் பிரதிவாதி என் அண்ணனை ஏமாற்றி அழைத்து சென்று தான பத்திரம் எழுதி வாங்கியுள்ளார்கள். மேற்படி விவரம் எனக்கு இவ்வழக்கு தாக்கல் செய்வதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு எனக்கு தெரியவந்தது. என் அண்ணனை ஏமாற்றி அழைத்து சென்று தானபத்திரம் எழுதி வாங்கியுள்ளார்கள்.

II. வழக்கு சொத்தின் வில்லங்கத்தை வழக்கு தாக்கல் செய்வதற்கு மூன்று மாதத்திற்கு முன்பு பார்த்தேன். அதை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன். 5 வது அயிட்ட சொத்தின் முகவரி நாங்கள் சென்று வாங்கியதால் எனக்கு தெரிந்தது. நான் வழக்குரையில் குறிப்பிட்டுள்ளபடி 5 வது அயிட்ட சொத்து தற்போது அங்கு இல்லை என்றால் சரியல்ல. 5 வது அயிட்ட சொத்தில் உள்ள கட்டிடத்தை அரசு இடித்து கட்டிடம் கட்டியுள்ளது. மேற்படி சொத்து அரசுக்கு சொந்தமான சொத்தாக இருந்து அதை நாங்கள் வாங்கினோம். மேற்படி சொத்து என் அண்ணன் பெயரில் அரசால் ஒதுக்கப்பட்டுள்ளது. 5 வது அயிட்ட சொத்து என் அண்ணன் மற்றும் அண்ணி அவர்களின் குழந்தைகள் பெயரில் அரசால் ஒதுக்கப்பட்டது என்றால் சரியல்ல. 1997 ம் ஆண்டியிலிருந்து 1, 2 அயிட்ட சொத்துக்களின் அடங்கலை தாக்கல் செய்துள்ளேன்.